©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 32] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 9, 2017
ஆடி 24, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

**அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்**

**தொழில் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 74, தொழில் (MMC.1)த் துறை, நாள்: 21 ஜூன் 2017.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (1–A) ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு சிறு கனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளின், 12–ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (2), பகுதி (b)ல்,–

(1) ‘‘மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதியைப் பெற்ற பின்னர்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘சம்பந்தப்பட்ட வட்டத்தின் வட்டாட்சியரிடமிருந்து அனுமதியைப் பெற்ற பின்னர்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்:

(2) மூன்றாவது வரம்பு நிபந்தனையில், ‘‘மாவட்ட ஆட்சியர்’’ என்ற தொடருக்குப் பதிலாக, ‘‘சம்பந்தப்பட்ட வட்டத்தின் வட்டாட்சியர்’’ என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அதுல்ய மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*



DTP—1-III-1(a)(T-Sup)—32

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 106, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 25 மே 2017]*

**1970** ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **37/1970**) **35–**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1975** ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்சொன்ன சட்டத்தின் **35–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் கோரியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

**(2)** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஒரு மாத கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, சென்னை**–600 006** இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை**–600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்.**–**

(a) விதி **20–**இன் துணை விதி **(4)** இல் ‘‘ரூபாய் ஐந்து’’ என்ற சொற்றொடருக்குப்பதிலாக ‘‘ரூபாய் ஐநூறு’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) விதி **24–**இன் துணை விதி **(1)** இல் ‘‘ரூபாய் **100/–** (ரூபாய் நூறு மட்டும்)’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ரூபாய் **500/–** (ரூபாய் ஐநூறு மட்டும்)’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(c) விதி **26–**இன் துணை விதி **(1)** மற்றும் **(2)** க்குப் பதிலாக கீழ்க்காணும் துணை விதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அவையாவன:**–**

**(1)** பிரிவு 7-இன்கீழ் நிறுவனம் ஒன்றின் பதிவு சான்றிதழைப்பெறுவதற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாக இருக்கும் அவையாவன:**–**

யாதொரு நாளில் ஒப்பந்தத்தின் பேரில் பணியமர்த்தப்படுவதற்கு கருதப்பட்ட பணியாளரின் எண்ணிக்கையானது:**–**

| | | |
|---|---|---|
| (a) **50–**க்கு மேற்படாமல் இருப்பின் | ரூ. | **2,500** |
| (b) **50–**க்கு மேற்பட்டு ஆனால் **100–**க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | **5,000** |
| (c) **100–**க்கு மேற்பட்டு ஆனால் **200–**க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | **10,000** |
| (d) **200–**க்கு அதிகமாக இருப்பின் | ரூ. | **20,000** |

**(2)**பிரிவு **12–**இன்கீழ் உரிமத்தினைப் பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாக இருக்கும் அவையாவன:**–**

யாதொரு நாளில் ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்படும் பணியாளர்களின் எண்ணிக்கையானது,**–**

| | | |
|---|---|---|
| (a) **50–**க்கு மேற்படாமல் இருப்பின் | ரூ. | **2,500** |
| (b) **50–**க்கு மேற்பட்டு ஆனால் **100–**க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | **5,000** |
| (c) **100–**க்கு மேற்பட்டு ஆனால் **200–**க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | **10,000** |
| (d) **200–**க்கு அதிகமாக இருப்பின் | ரூ. | **20,000** |

(d) விதி **27–**இன் துணை விதி **(1)** இல் "அந்த ஆண்டின் டிசம்பர் **31** வரையில்," என்ற சொற்றொடருக்குப்பதிலாக" அந்த ஆண்டிலிருந்து தொடங்கி தொடர்ச்சியான இரண்டு ஆங்கில ஆண்டுகளின் கால அளவிற்கு" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(e) விதி **28–**இன் துணை விதி **(3)** இல் ‘‘இருபத்தைந்து ரூபாய்’’ என்ற சொற்றொடருக்குப்பதிலாக ‘‘ஐநூறு ரூபாய்’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(f) விதி **30–**இல் ரூ.**50/–** (ரூபாய் ஐம்பது மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக ரூ.**500/–** ‘‘(ஐநூறு ரூபாய் மட்டும்)’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(g) விதி 32—இன் துணை விதி (6) மற்றும் (7) க்குப் பதிலாக, பின்வரும் துணை விதிகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அவையாவன;—

(6) துணை விதி (3)—இன் கீழ் பதிவு சான்றிதழைப்பெறுவதற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாக இருக்கும்:—

யாதொரு நாளில் ஒப்பந்தத்தின் பேரில் பணியமர்த்தப்படுவதற்கு கருதப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையானது.—

| | | |
|---|---|---|
| (a) 50—க்கும் மேற்படாமல் இருப்பின் | ரூ. | 500 |
| (b) 50—க்கு மேற்பட்டு ஆனால் 100—க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | 1,000 |
| (c) 100—க்கு மேற்பட்டு ஆனால் 200—க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | 2,000 |
| (d) 200—க்கு அதிகமாக இருப்பின் | ரூ. | 4,000 |

(7) துணை விதி (3)—இன்கீழ் உரிமம் பெறுவதற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாக இருக்கும்:—

யாதொரு நாளில் ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்படும் பணியாளரின் எண்ணிக்கையானது.—

| | | |
|---|---|---|
| (a) 50—க்கும் மேற்படாமல் இருப்பின் | ரூ. | 500 |
| (b) 50—க்கு மேற்பட்டு ஆனால் 100—க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | 1,000 |
| (c) 100—க்கு மேற்பட்டு ஆனால் 200—க்கு மிகாமல் இருப்பின் | ரூ. | 2,000 |
| (d) 200—க்கு அதிகமாக இருப்பின் | ரூ. | 4,000 |

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 108, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 25 மே 2017.]*

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் (தமிழ்நாடு சட்டம் 13/1958) சட்டத்தின் 29 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவு விடுதிகள் விதிகளில் பின்வரும் திருத்தங்கள் இதனால் செய்கிறார்.

2. இதனால் செய்யப்பட்ட திருத்தங்கள் இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டு செயலுக்கு வரும்.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்.—

(1) 3 ஆம் விதியின் (2) துணைவிதியில், அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:—

### “அட்டவணை

பதிவிற்குத் தொடர்புடைய ஆங்கில ஆண்டின் யாதொரு நாளில் பணியமர்த்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் பணியாளர்களின் எண்ணிக்கையானது:—

| *பணியாளர்களின் எண்ணிக்கை* *(1)* | *கட்டணம் (ரூபாயில்)* *(2)* |
|---|---|
| 5—க்குள் இருப்பின் | 250/— |
| 5—க்கு அதிகமாக ஆனால் 10க்குள் இருப்பின் | 500/— |
| 10—க்கு அதிகமாக ஆனால் 20க்குள் இருப்பின் | 1,000/— |
| 20—க்கு அதிகமாக ஆனால் 50க்குள் இருப்பின் | 2,500/— |
| 50—க்கு அதிகமாக ஆனால் 100க்குள் இருப்பின் | 5,000/— |
| 100—க்கு அதிகமாக ஆனால் 500க்குள் இருப்பின் | 10,000/— |
| 500—க்கு அதிகமாக இருப்பின் | 50,000/— |

(2) 5–A ஆம் விதியின் (3) துணைவிதியில், ‘‘முப்பது ரூபாய்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘நூறு ரூபாய்’’ என்னும் சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(3) 6–A ஆம் விதியின் (2) துணைவிதியில், ‘‘பதினைந்து ரூபாய்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘நூறு ரூபாய்’’ என்னும் சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(4) 7–ஆம் விதியின் (1) உட்பிரிவில் ‘‘பதினைந்து ரூபாய்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘நூறு ரூபாய்’’ என்னும் சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.’’

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 117, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 12 ஜூன் 2017.]*

1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1961) 40–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1965–ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார். அதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் வரம்பு நிபந்தனையில் கோரியுள்ளவாறு, முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 43–ஆம் விதியில், ‘‘ஆண்டு விவர அறிக்கை இரு படிகளில்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘படிவம் எண் XIX-ல் ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை’’ என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(2) படிவம் XIX–க்கு பதிலாக, பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"படிவம் 19

(43 ஆம் விதியைக் காண்க)

31–12–20–ஆம் நாளன்றுடன் முடிவடையும் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஆண்டு விவர அறிக்கை

**1.** மோட்டார் வாகனப் போக்குவரத்து நிறுவனத்தின் பெயர் :

**2.** முழுமையான அஞ்சல் முகவரி (நிகரி மற்றும் மின்னஞ்சல்),– :

*(i)* மோட்டார் வாகனப் போக்குவரத்து நிறுவனம் :

*(ii)* பதிவு செய்யப்பட்ட அலுவலகம்/தலைமை அலுவலகம் :

*(iii)* பிரிவுகள்/கிளைகள் :

**3.** வணிகம்/தொழில்/பணி/பணியமைப்பு/மேற்கொள்ளப்படும்பணி/ அளிக்கப்படும் சேவையின் தன்மை :

**4.** பதிவெண் :

**5.** பதிவுச் சான்றிதழின் செல்திறன் அளவு :

**6.** வேலை அளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி (அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல்) :

**7.** மேலாளரின்/அனுமதிக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் முகவரி (அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல்)

**8.** அன்றாடம் பணிபுரியும் பணியாளர்களின் சராசரி எண்ணிக்கை:–

*(அ)* உரியவயதடைந்தவர் :

*(ஆ)* வளரிளம் பருவத்தினர் :

மொத்தம் :

**9.** நாளொன்றின் வழக்கமான பணி நேரம் :

**10.** அளிக்கப்படும் ஓய்வு இடைவேளை

**11.** வாராந்திர விடுமுறை :

**12.** 19 – ஆம் பிரிவிலிருந்து விலக்களிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

**13.** அவ்வாண்டில் பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை :

**14.** மிகை நேர ஊதியம் மற்றும் படிகள் உட்பட வழங்கப்பட்ட மொத்த சம்பளம்/ஊதியத் தொகை :

**15.** ஈடுசெய் விடுப்பு எடுத்த பணியாளர்களின் எண்ணிக்கை :

*(i)* அதே திங்களில்

*(ii)* அடுத்த திங்களில்

*(iii)* மூன்றாவது திங்களில்

**16.** பணி நிறுத்தம்/இடைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:– :

*(i)* அந்த ஆண்டில் விடுவிக்கப்பட்ட/பணியறவு செய்யப்பட்ட/பணி நீக்கம் செய்யப்பட்ட/பதவி விலகிய / பணி ஓய்வு பெற்ற/மரணமடைந்த பணியாளர்களின் எண்ணிக்கை :

*(ii)* அளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை :

*(iii)* அந்த ஆண்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை :

*(iv)* அளிக்கப்பட்ட பிழைப்பூதியப் படியின் தொகை அளவு :

**17.** ஊதியங்கள்.

*(i)* பிடித்தம் உட்பட வழங்கப்பட்ட மொத்த ஊதியம்,–

*(அ)* அடிப்படை ஊதியம் :

*(ஆ)* அகவிலைப்படி :

*(இ)* மிகைநேர ஊதியம் :

*(ஈ)* ஆதாயமற்ற மிகை ஊதியப் பகிர்வு :

*(உ)* ரொக்கமாக வழங்கப்பட்ட பிற படிகள் :

*(ஊ)* அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டுக்கான சம்பள நிலுவை :

*(ii)* மாதம் ரூ.18,000/–* க்கும் அதிகமாக ஊதியம் பெறாத நபர்களின் எண்ணிக்கை: (*மத்திய அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் மாற்றத்திற்கு உட்பட்டது) :

ஆண் :

பெண் :

வளரிளம் பருவத்தினர் :

*(iii)* ஊதியங்களிலிருந்து பிடித்தம் செய்தது குறித்த விவரங்கள்:—

| *பிடித்தங்கள்* | | *சம்பந்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை* | *பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை* |
|---|---|---|---|
| *(அ)* அபராதங்கள் | | | |
| *(ஆ)* சேதங்கள்/இழப்பு | | | |
| *(இ)* ஒப்பந்த மீறுகை | | | |
| *(ஈ)* ஏனையவை | | | |
| **மொத்தம்** | : | | |

*(iv)* ஊதியக் கால அளவு :

*(v)* ரொக்கமாக வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள் :

*(vi)* பொருளாக அளிக்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பண மதிப்பு :

| *(vii)* அபராதங்களிலிருந்து வழங்கப்பட்டவை | நோக்கம் | தொகை |
|---|---|---|
| *(அ)* | | |
| *(ஆ)* | | |
| (இ) | | |

*(viii)* அந்த ஆண்டின் இறுதியில் கையிருப்பாக உள்ள அபராதத் தொகை: :

**18.** விடுப்பு:—

*(i)* ஈட்டிய விடுப்பிற்குத் தகுதியுடைய பணியாளர்களின் எண்ணிக்கை

*(ii)* ஈட்டிய விடுப்பு பயன்படுத்திய/அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

*(iii)* ஈட்டிய விடுப்பிற்கு பதிலாக ஊதியம்/சம்பளம் வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

**19.** வகை செய்யப்பட்ட நல நடவடிக்கைகள் (''ஆம்'' என்றால் வழங்கப்பட்ட தரநிலைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்):—

*(i)* சிற்றுண்டியகம் :

*(ii)* ஓய்வறைகள் :

*(iii)* மருத்துவ வசதிகள்:—

*(அ)* மருந்தகங்களின் எண்ணிக்கை :

*(ஆ)* மருத்துவர்களின் எண்ணிக்கை :

(இ) செவிலியர்களின் எண்ணிக்கை :

*(iv)* சீருடை :

*(v)* முதலுதவிப் பெட்டி :

**20.** பேறுகாலச் சலுகைகள்:

| (i)......................க்கான பயன்கள் | | *பயன்பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை* | *அளிக்கப்பட்ட மொத்த தொகை* |
|---|---|---|---|
| *(அ)* கருச்சிதைவு | : | | |
| *(ஆ)* பிள்ளைப்பேற்று நிலை | : | | |
| *(இ)* உடல் நலக்குறைவு | : | | |
| *(ஈ)* மருத்துவ மிகை ஊதியம் | : | | |
| **மொத்தம்** | **:** | | |

*(ii)* **1961–**ஆம் ஆண்டு பேறுகாலப் பயன் சட்டத்தின் **6**ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு அளித்த பெண்களின் எண்ணிக்கை **:**

*(iii)* பிள்ளைப்பேற்று நிலையிலிருந்து குறித்த அறிவிப்பு வரப்பெற்றதன் பேரில் விடுப்பு அனுமதி அளிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை **:**

| | | |
|---|---|---|
| *(iv)* சம்பந்தப்பட்ட பெண்ணிற்கு நேரடியாக அளிக்காமல் பிறநபர்களுக்கு தொகை வழங்கிய நேர்வுகள் | : | எண்ணிக்கை<br>வழங்கப்பட்ட தொகை: |
| *(v)* மேல்முறையீட்டு அதிகாரி அல்லது ஆய்வாளரின் உத்தரவின் பேரில் தொகை வழங்கப்பட்ட நேர்வுகள் | : | எண்ணிக்கை<br>வழங்கப்பட்ட தொகை: |
| *(vi)* பேறுகாலப் பயன் மறுக்கப்பட்ட கோரிக்கைகள் வழங்கப்படாத தொகை | : | எண்ணிக்கை<br>அளிக்கப்படாத தொகை: |
| *(vii)* மறுக்கப்பட்ட மருத்துவ மிகை ஊதியக் கோரிக்கைகள் வழங்கப்படாத தொகை | : | எண்ணிக்கை<br>அளிக்கப்படாத தொகை: |
| *(viii)* கருச்சிதைவு ஏற்பட்டதன் பேரில் விடுப்பு விண்ணப்பிக்கப்பட்ட ஆனால் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | : | எண்ணிக்கை<br>அளிக்கப்படாத தொகை: |
| *(ix)* **10–**ஆம் பிரிவின் கீழ் உடல் நலமின்மைக்காகக் கூடுதல் விடுப்பு கோரப்பட்டு, ஆனால் நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | : | எண்ணிக்கை<br>அளிக்கப்படாத தொகை: |
| *(x)* **1961–**ஆம் ஆண்டு பேறுகாலப் பயன் சட்டத்தைச் சேர்ந்த **12–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவின் வரம்பு நிபந்தனையின் கீழ் அளிக்கப்படும் பேறுகாலப் பயன் மற்றும்/மருத்துவ மிகை ஊதியத் தொகை அல்லது மேற்சொன்ன இரண்டும் கிடைக்கப்பெறாத பெண்கள் | : | எண்ணிக்கை<br>வழங்கப்படாத தொகை: |
| *(xi)* **1961–**ஆம் ஆண்டு பேறுகாலப் பயன் சட்டத்தின் **8–**ஆம் பிரிவின் கீழ், பேறுகாலத்திற்கு முந்திய மற்றும் பேறுகாலத்திற்குப் பின்னர் கட்டணமின்றிச் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை | : | |

**21.** தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி வகையில் வசூலிக்கப்பட்ட தண்டத் தொகையைச் செலுத்திய விவரங்கள்:

*(i)* கேட்பு வரைவோலையின் எண் மற்றும் நாள் :

*(ii)* வங்கி :

*(iii)* தொகை :

**22.** மிகை ஊதியம் :

*(i)* மிகை ஊதியத் தொகை வழங்கியதால் பயன்பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை :

*(ii)* அறிவிக்கப்பட்ட மிகை ஊதியத்தின் விழுக்காடு :

*(iii)* வழங்கப்பட்ட மிகை ஊதியங்களின் மொத்தத் தொகை :

*(iv)* தொகை வழங்கப்பட்ட நாள் :

**23.** நிரந்தரப் பணித்தகுதிநிலை அளிக்கப்படுதல்:—

*(i)* 480 நாள்கள் தொடர்ந்து பணிபுரிந்துள்ள தற்காலிகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை :

*(ii)* இந்தக் கால அளவில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை :

*(iii)* இந்தக் கால அளவில் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படாமலிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை :

*(iv)* தாமதத்திற்கான காரணங்கள் :

**24.** ஒப்பந்தத் தொழிலாளர் :

*(i)* ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள் :

*(ii)* ஒப்பந்தத் கால அளவு :

*(iii)* ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்த பணியின்/செயற்பாடுகளின் தன்மை :

*(iv)* ஒவ்வொரு ஒப்பந்ததாரராலும் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை :

*(v)* பணிசெய்த நாட்களின் எண்ணிக்கை :

*(vi)* பணிசெய்த மனித வேலை நாட்களின் எண்ணிக்கை :

**25.** மாநிலங்களுக்கிடையே புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் :—

*(i)* சொந்த மாநிலத்தின் ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள் :

*(ii)* பணியமர்த்தும் மாநிலத்தின் (தமிழ்நாடு) முதன்மை வேலையளிப்பவரின் பெயர் :

*(iii)* ஒப்பந்தக் கால அளவு :

*(iv)* புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கும் பணியின்/செயற்பாடுகள் தன்மை :

*(v)* ஒவ்வொரு ஒப்பந்தரராலும் பணியமர்த்தப்படும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை :

*(vi)* பணிசெய்த நாட்களின் எண்ணிக்கை :

*(vii)* பணிசெய்த மனித வேலை நாட்களின் எண்ணிக்கை :

(viii) இடம்பெயர்வுப் படியாக வழங்கப்பட்ட தொகை :

*(ix)* பயணம் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் அளிக்கப்பட்ட போக்குவரத்துப் பயணப் படித்தொகை :

*(x)* பயணம் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் வழங்கப்பட்ட ஊதியங்களின் தொகை அளவு :

நான் நன்கு அறிந்தவரையிலும் நம்புகிறவரையிலும் மேற்சொன்ன தகவல்கள் சரியானவை என்று சான்றளிக்கிறேன்.

நாள்: வேலையளிப்பவரின் கையொப்பம்.''

இடம்:

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.